1978 மார்ச் 27]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் 1977-ஆம் ஆண்டு, நவம்பர் 1-ஆம் தேதி முதல் 1978 பிப்ரவரி வரையில் 410 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ஆ. நடராசன் : பட்டா ஏதேனும் திரும்பப் பெறப் பெற்றதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நவம்பர் 1977 முதல் இன்று வரை ஏதேனும் பட்டா திரும்பப் பெறப்பட்டதா என்று கேள்வி. பதில் இல்லை.

தென்காசியில் சப்-கோர்ட்.

* 670 வினா—திரு. எம். எம். ஏ. ரசாக் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், தென்காசியில் சப்-கோர்ட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :

(a) Yes.

(b) The proposal is under the consideration of the Government.

திருவெறும்பூர் தொழிற்பயிற்சிப் பள்ளி

* 671 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொழிற்பயிற்சிப் பள்ளியில் (Industrial Training Institute) 10-7-1977 மற்றும் 11-7-1977 அன்று நடைபெற்ற தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதுபற்றி அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) மற்றும் (ஆ) எந்தவிதமான முறைகேடுகளும் நிகழ வில்லே.

சித்திலங்கமடம் உயர்நிலேப் பள்ளிக் கட்டடம்.

* 672 வினு—திரு. இல. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டம், திருநாவலூர் தொகுதியில் உள்ள சித்திலங்கமடம் என்ற கிராமத்தில் பொதுப்பணித் துறையில் 1973-74-ல் கட்டப்பட்ட அரசு உயர்நிலேப் பள்ளிக் கட்டடம் ஒரு வருடத்திற்குள் இடிந்து விழுந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) இப் பழுதடைந்த கட்டடத்தினை சீர் செய்வதற்கு ரூ. 27,600-க்கான மதிப்பீட்டை விழுப்புரம் பொதுப் பணித் துறை செயற்பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இக்கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: 1973-74-ல் கட்டப்பட்டு இடிந்து விட்டது என்பதுதான் இந்தக் கேள்வியினுடைய எண்ணமாக இருக்கிறது. ஆகவே, யார் கான்ட்ராக்ட் எடுத்தது? யார் இப்படிப்பட்ட நிலேயை உண்டாக்கினுர்கள் ? அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலேவரவர்களே, நெடுஞ்சாலே கிராமப்பணி தலேமைப் பொறியாளரிடம் இப்பள்ளிக் கட்டடம் விழுவதற்குக் காரணம், இதற்கு பொறுப்பாளர்கள் யார் என்பதைப்பற்றி ஓர் விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளது. அன்னுர் 18-3-1978 அன்று ஓர் நேர்முகக் கடிதத்தின் மூலம் நினைவுறுத்தப்பட்டிருக்கிருர்.